Name of the Newspaper ..... DINAMALAR ..... Date: 15-2-18

# ஒலி மாசு விழிப்புணர்வு பள்ளி மாணவியர் பிரசாரம்



■ சென்னை மெட்ரோ ரயில் மற்றும், 'யங் இந்தியன்ஸ்' அமைப்பின் சார்பில் நடந்த பேரணியில், ஒலி மாசைத் தவிர்க்க வலியுறுத்தி, வாகன ஓட்டிகளிடம், விழிப்புணர்வு ஏற்படுத்திய பள்ளி மாணவியர். இடம்: கோயம்பேடு, சென்னை.

சென்னை, பிப். 15–

அதிக ஒலியால் ஏற்படும் பிரச்னை குறித்து, மெட்ரோ ரயிலில், பள்ளி மாணவியர் விழிப்புணர்வு பிரசாரம் செய்தனர்.

சென்னையில், அதிக அளவிலான வாகன போக்கு வரத்தால், ஒலி மாசு அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்க, மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில் நேற்று, சேவா சதன் பள்ளி மாணவியரால், கோயம்பேட்டில் உள்ள, மெட்ரோ ரயில் தலைமை அலுவலகம் எதிரே, ஒலி மாசு விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

இதில், தன்னார்வ சேவை பிரிவை சேர்ந்தவர்களும் பங்கேற்றனர். அளவுக்கு அதிகமான ஒலியால், மனிதர்களுக்கு உயர் ரத்த அழுத்தம், மாரடைப்பு, மன உளைச்சல் போன்ற பல இடர்பாடுகள் ஏற்படுகின்றன. தேவையற்ற இரைச்சலை தவிர்க்க, வாகன ஓட்டிகள், ஹாரனை குறைவாக பயன்படுத்த, பிரசாரத்தில் வலியுறுத்தப்பட்டது.

இதன்பின், கோயம்பேட்டில் இருந்து, விமான நிலையம் வரையும், விமான நிலையத்தில் இருந்து, ஷெனாய் நகர் வரையும், மெட்ரோ ரயிலில், மாணவியர் விழிப்புணர்வு பிரசாரம் செய்தனர்.